**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, PADMANABHAPURAM**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 67/2020 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. லோகேஷ்வரன் | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. தீனதயாளன் | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 09.07.2026..**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்போது தேனி முகவரியில் வசித்து சிவில் இன்ஜீனியராக பணிபுரிந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 2018 – 2024 வரை தக்கலையில் ராம்கோ சிமெண்ட் கம்பெனியில் சிவில் இன்ஜீனியராக வேலை செய்து வந்தேன். கடந்த 13.11.2019ம் தேதி மாலை 06.00 மணிக்கு வைகுண்டவாசகர் என்னை பார்ப்பதற்காக இருசக்கர வாகனத்தில் மார்த்தாண்டத்தில் இருந்து தக்கலை நோக்கி வந்து கொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிரே வந்த தக்கலை – மார்த்தாண்டம் செல்லும் அரசு பேருந்து அதி வேகமாவும், அஜாக்கிரதையாகவும் சாலையின் வெள்ளை கோட்டை கடந்து வலது பக்கமாக ஏறிவந்து வைகுண்டவாசகர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதியதில் அவருக்கு வலதுபக்க காலிலும், இடுப்பிலும், வலது கையிலும், தலையிலும் அடிபட்டது.

2. அவருக்கு பின்னால் வந்து கொண்டிருந்த சாலமன் மற்றும் அரவிந்த் சுப்ரமணியன் தகவல கொடுத்ததன் அடிப்படையில் நான் அங்கு சென்று நானும் சாலமனும் வைகுண்டவாசகரை காரில் ஏற்றி ஜெயசேகரன் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். மறுநாள் காலை 1030 மணிக்கு வைகுண்டவாசகர் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக நான் புகார் கொடுத்தேன்.

3. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1. தக்கலையில் எத்தனை வருடமாக வேலை செய்தேன் என்றால் 7, 8 வருடங்கள் வேலை செய்தேன். விபத்தில் இறந்து போன நபரை எனக்கு எவ்வளவு வருடமாக தெரியும் என்றால் அவர் 4 மாதத்திற்கு முன்பு தான் கம்பெனியில் வேலைக்கு சேர்ந்தார். நானும் அவரும் ஒன்றாக தான் வேலைக்கு செல்வோம் என்றால் இல்லை. விபத்து நடந்த பகுதி எந்த இடம் என்றால் அழகியமண்டபத்தில் உள்ள பெட்ரோல் பங்க் அருகே விபத்து நடந்தது.

2. காலையிலும் மாலையிலும் அழகியமண்டபத்தில் இருந்து மூளகுமூடு வரை அதிகமான போக்குவரத்து இருக்கும் என்றால் சரிதான். அந்த பகுதியில் வேகமாக செல்ல முடியாது என்றால் சரிதான். அந்த பகுதியில் பெட்ரோல் பங்க் இருப்பதால் பெட்ரோல் போடுவதற்கு வாகனங்கள் திரும்புவதால் மெதுவாக தான் வாகனங்கள் செல்லும் என்றால் சரிதான்.

3. விபத்து நடந்த போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றல் சரிதான். புகார் மனுவை நான் தான் எழுதி கொடுத்தேன். யாரிடம் கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. இருசக்கர வாகனத்தில் செல்லும் போது தலைகவசம் அணிவது கட்டாயம் என்றால் ஆமாம். விபத்தில் இறந்து போன தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார் அவருக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தது.

4. நானும் சாலமனும் காரில் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். நேரம் ஞாபகமில்லை. ஏன் அருகில் உள்ள தக்கலை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் அதிகமான காயங்கள் ஏற்பட்டிருந்ததால் தனியார் மருத்துவனைக்கு அழைத்துச் சென்றோம். வைகுண்டவாசகருக்கு இழப்பீடு பெற்றுத்தர வேண்டி பொய்யாக புகார் மனு கொடுத்து அதன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. குற்றம்சுமத்தப்பட்ட நபருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் இறந்துபோன வைகுண்டவாகசர் தான் கவனக்குறைவாகவும், அதிவேகமாகவும் வந்து பேருந்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.I
Padmanabhauram .